நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 24/2025

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாதேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | நாச்சிமுத்து |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.56PM.

1. எடைக்கல் மற்றும் தேங்காய் மிட்டாய் வைத்து எதிரி தன்னை அடித்ததாக அ.சா.1 மகேஸ்வரி விசாரிக்கும்போது சொன்னார். நான் பார்க்கும்போது முகத்திலோ, கைகளிலோ வெளி காயங்கள் எதுவும் இல்லை. நான் சம்பவ இட

விசாரணை மேற்கொள்ளவில்லை. மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் ரசீது கொடுத்து எதிரியை இரண்டு முறை அழைத்து விசாரணை செய்தேன்.

2. எதிரி எனது விசாரணையில் ஆஜரானார் என்பது குறித்தும் இந்த விசாரணையில் பதிவு செய்த ஆவணங்களையும் உதவி ஆய்வாளர் வசம் அவர் என்னை விசாரிக்கும்போது ஒப்படைத்தேன். நான் சொன்னவாறு அவ்வாறு ஒப்படைத்து இருந்தால் அந்த ஆவணங்களில் இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு எந்த விசாரணையும் செய்யவில்லை என்றாலும், நான் சொன்னவாறு எந்த ஆவணங்களையும் ஒப்படைக்கவில்லை என்றாலும், சரியல்ல.

3. நான் அவ்வாறு ஒப்படைத்ததாக உதவி ஆய்வாளர் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் நான் CSR மட்டும்தான் ஒப்படைத்தேன். இரு தரப்பிலும் நான் ஒப்படைத்தபோது வழக்கறிஞர் ஆஜராகி இருந்தார்கள். அவர்கள் எந்த ஆவணங்களையும் எழுதி கொடுக்க மறந்துவிட்டார்கள். நான் விசாரித்த இரண்டு முறையுமே எழுதி தர மறுத்துவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சாரதா அவ்வாறு எழுதி கொடுக்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. அந்த ஆவணங்கள் CSR தொடர்பாக உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போது எழுதி கொடுக்கப்பட்டவை.

4. புகார் கொடுத்த மகேஸ்வரி என்பவர் முதல் தகவல் அறிக்கை வேண்டாம் என்றும் தனது பெண்ணின் வாழ்க்கையை கருத்தில் கொண்டு வழக்கு பதிவு செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் விசாரித்தேன். நான் அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும், அதற்கு முன்பாக 18.03.2023ம்தேதியே இருவரும் பஞ்சாயத்து பேசி பிரிந்து விட்டதாக நோட்டரி வழக்கறிஞர் மூலம் எழுதி பிரிந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

5. 14.07.2024ம்தேதியிட்ட புகார் சம்பந்தமாக எந்த தேதியில் வழக்கு பதிவு

செய்தீர்கள் என்றால் 18.10.2024ம் தேதி ஆகும். மேற்படி காலதாமதத்திற்கான காரணம் எதையும் முதல் தகவல் அறிக்கையில் நான் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். ஒரு புகார் ரசீது பதிவு செய்யப்பட்டால் அது குறித்து 15 நாட்களுக்குள் விசாரணை செய்து முடிவு எட்டப்படவேண்டும் என்றாலும், அ.சா.1 கேட்டு கொண்டதற்கிணங்க எதிரி மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக பொய் வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. இரண்டு வார காலத்திற்குள் CSR மீது முடிவு எட்டப்படிவில்லை எனில் அது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. அது எல்லா CSRக்கும் பொருந்தாது. குடும்ப பிரச்சினை என்பதால் அதன் பின்னிட்டும் விசாரணை செய்யலாம்.உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியை பழி வாங்கும் எண்ணத்தில் கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக அ.சா.1 மகேஸ்வரியின் காயச் சான்றிதழை நான் பெறவில்லை. நான் காயச் சான்றிதழை பெற்று கொண்டுதான் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. நான் முறையாக அ.சா.1 மகேஸ்வரியை விசாரிக்காமலும், சம்பவ இடத்திற்கு போய் விசாரிக்காமலும், தவறான வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.24PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**